## முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2024 ம் ஆண்டு மார்ச் மாதம் 05-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.932 /2015

வா.சா.1 **நவீனா**

**17 முதல் 19 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Sc., Med படித்துள்ளேன். பிராதில் உள்ள சங்கதிகள் எல்லாம் என்னால் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா முதலாவது அயிட்டத்தில் கண்டுள்ள 4 ம் இன சொத்து 269/3 நெம்பர் காலையில் 35 சென்ட் பூமியும், 269/4 ம் காலையில் 65 சென்ட் பூமியும் ஒரே இனமாக உள்ளதா என்றால் 2 பூமியும் தனித் தனி இனமாக உள்ளது. நான் மேற்படி 2 காலைகளிலும் உள்ள பூமியும் ஒரே இனமாக இருப்பதாகத்தான் செக்குபந்தி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இரண்டு பூமிக்கும் இடையில் தடம் உள்ளது. மேற்படி 1 ஏக்கர் பூமியானது எனது தாத்தா வாரனாசிகவுண்டரின் அப்பா சென்னிமலைகவுண்டருக்கு பிதுராஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். முதல் பிரதிவாதி வாரனாசிகவுண்டர் தான் எனது தாத்தா என்றும், வாராரனாசிகவுண்டரின் அப்பா தான் சென்னிமலைகவுண்டர் என்றால் சரிதான்.

1 ம் பிரதிவாதி வாரனாசிகவுண்டர் நான் வழக்கை தாக்கல் செய்த பிறகு கடந்த 15.11.2021 தேதியில் இறந்து விட்டார் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி வாரனாசிகவுண்டரின் தகப்பனார் சென்னிமலைகவுண்டரும் அவரது சகோதரர் கருப்பணகவுண்டரும் கடந்த 10.7.1998 தேதியில் பிதுராஜித சொத்துக்களை பொறுத்து பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

**மேற்படி ஆவணத்தை 17 முதல் 19 பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்யும் பொருட்டு சாட்சியிடம் காட்டி கேட்டபோது சாட்சியானவர் தன்னால் கண்**

கண்ணாடி இல்லாமல் ஆவணங்களை படித்து பார்க்க இயலாது என தெரிவித்ததின்பேரில் சாட்சிக்கு மூக்கு கண்ணாடி அணிந்து சாட்சியம் அளிக்கும் பொருட்டு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.